[1984 மார்ச் 5

செவிடு மற்றும் ஊமை மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டம்.

173—(*வினா எண் 18211) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செவிடர் மற்றும் ஊமை மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) காது கேளாதோருக்கென சென்னையிலே உள்ள கிண்டி மற்றும் மதுரையிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மின் கம்பியாளர் போன்ற தொழிற் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வரு கின்றன.

(ஆ) 1981 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் இந்தப் பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலம் 2 ஆண்டுகள். 15 முதல் 30 வயதிற்குட்பட்டுள்ள பள்ளி இறுதி ஆண்டு படிப்பு முடித்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம்.

174—(*வினா எண் 21303) திரு. டி. மணி :—மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கன்னியாகுமரி மாவட்டத்தில் தீவிர கால்நடை அபிவிருத் தித் திட்டம் அமுல்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : கன்னியாகுமரி மாவட்டத்தில், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் அமுல் படுத்த, தற்போது கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

நிதி நிலைக்கேற்ப, இம் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதுபற்றி, நாளாவட்டத்தில் ஆய்வு செய்யப்படும்.